

மணிப்பூரில் பெண்களுக்கு நடந்த கொடூரத்தை தடுக்க தவறிய ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து திருப்பூர் வடக்கு மாவட்ட மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி சார்பில் திருப்பூர் ரயில் நிலையம் அருகில் அமைந்துள்ள பெரியார், அண்ணா சிலை முன்பு மாநில மகளிர் அணி பிரச்சாரக்குழு செயலாளர் செ.உமாமகேஸ்வரி தலைமையில் திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் முன்னிலையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் மகளிர் அணி நிர்வாகிகள், மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்டக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், இன்னாள், முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.



மணிப்பூரில் பெண்களுக்கு நடந்த கொடூரத்தை தடுக்க தவறிய ஒன்றிய பா.ஜ.க. அரசை கண்டித்து திருப்பூர் தெற்கு மாவட்ட மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி சார்பில் தாராபுரம் அண்ணா சிலை அருகில் மகளிர் தொண்டர் அணி துணை செயலாளர் சத்யா பழனிக்குமார் தலைமையில், திருப்பூர் தெற்கு மாவட்ட கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன் முன்னிலையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் மகளிர் அணி நிர்வாகிகள், மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், இந்நாள், முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

### இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள

# தமிழ்நாட்டு மீனவர்களை விடுவித்திட நடவடிக்கை எடுத்திடுக!

## ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

**சென்னை, ஜூலை 27 -**

**இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்களை விடுவித்திடவும், அவர்களது படகினைத் திரும்ப ஒப்படைக்கவும் உரிய தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென வலியுறுத்தி ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**

தமிழ்நாட்டைச் சேர்ந்த 9 மீனவர்கள் 24.7.2023 அன்று இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள சூழ்நிலையில், அவர்களை விடுவிக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்தி, ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் அவர்களுக்கு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 25.7.2023 அன்று கடிதம் எழுதியுள்ளார்.

அதில், தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தொடர்ந்து சிறைபிடிக்கப்படும் சூழ்நிலையில், நீண்டகாலமாக நிலவிவரும் இப்பிரச்சினையைத் தீர்க்க தூதரக அளவிலான முயற்சிகளை முடுக்கி விடுமாறு தான் அண்மையில் கோரிக்கை விடுத்திருந்ததாக வும், இருப்பினும் தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தொடர்ந்து கைது செய்யப்படுவது குறித்து ஆழ்ந்த கவலையுடனும், ஏமாற்ற உணர்வுடனும் இந்தக் கடிதத்தை எழுதுவதாக முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

**இலங்கை அதிபர் சந்திப்பு!**

இந்தியாவிற்கு, இலங்கை அதிபர் அரசு முறைப் பயணம் மேற்கொண்டிருந்தபோது, முக்கியத்துவம் வாய்ந்த இப்பிரச்சினை குறித்து இந்தியப் பிரதமர் அவர்கள் விவாதிக்க வலியுறுத்தி இருந்ததாகவும், மீனவர் பிரச்சினையில் ஆக்கப்பூர்வமான பேச்சு வார்த்தைகளில் ஈடுபடுவதற்கும், இந்திய மற்றும் இலங்கை மீனவர்களின் உரிமைகள் மற்றும் வாழ்வாதாரங்களை மதிக்கும் வகையில், ஒரு நிரந்தரத் தீர்வைக் காண்பதற்கும் இலங்கை அதிபருடனான சந்திப்பு வழிவகுக்கும் என தாம் நம்பியதாகவும் தமிழ்நாடு முதல மைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

**மீனவர்கள் மீது**
**தாக்குதல் தொடர்கிறது!**

இந்தச் சூழ்நிலையில், இந்தியா மற்றும் இலங்கை நாடுகளுக்கிடையே உயர்மட்ட அளவிலான பேச்சு வார்த்தைகள் நடைபெற்ற போதிலும், தமிழ்நாட்டு மீனவர்கள் தாக்கப்படும், கைது செய்யப்படும் சம்பவங்கள் தொடர்வதாகக் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டைச் சேர்ந்த 9 மீனவர்களும், அவர்களது INDTN11MM837, INDTN11MM257 பதிவு எண்கள் கொண்ட 2 விசைப்படகுகளும் இலங்கைக் கடற் படையினரால் நேற்று முன்தினம் சிறை பிடிக்கப்பட்டுள்ளதை தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ்நாட்டு மீனவர்கள் தொடர்ந்து கைது செய்யப்பட்டு, அவர்களது படகுகள் பறிமுதல் செய்யப்படுவதால், அவர்கள் கடும் இன்னல்களைச் சந்தித்து வருவதாகவும், இந்தச் சம்பவங்கள் இரு தரப்பு உறவுகளை சீர்குலைத்து, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு கடுமையான சமூகபொருளாதார விளைவுகளை ஏற்படுத்துகின்றன என்றும் முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

இந்நிலையில், கைது செய்யப்பட்டுள்ள மீனவர்களை விடுவிக்கவும், பறிமுதல் செய்யப்பட்ட அவர்களது படகுகளை பாதுகாப்பாக திரும்ப ஒப்படைக்க வும் கேட்டுக் கொண்டுள்ள முதலமைச்சர் அவர்கள், பாக் வளைகுடா பகுதியில் மீன்பிடி உரிமைகளைப் பாதுகாத்திட, இருதரப்பும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிரந்தரத் தீர்வு காண வேண்டிய அவசியத்தை மீண்டும் வலியுறுத்துவதாகவும், இதுதொடர்பாக சாத்தியமான அனைத்து தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் அவர்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

# முதல்வர் தொடங்கி வைக்கிறார்...

முதல் பக்கத் தொடர்ச்சி

உணவு பதப்படுத்தும் மற்றும் வேளாண் ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகம், பட்டு வளர்ச்சி, தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் ஒன்றிய அரசின் வேளாண் ஆராய்ச்சி நிறுவனங்கள், கூட்டுறவு நிறுவனங்கள், பல்வேறு பயிர்கள் சார்ந்த வாரியங்கள், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், தமிழ்நாடு கால்நடை அறிவியல் பல்கலைக்கழகம் மற்றும் மீன்வளப் பல்கலைக்கழகங்களும் பங்கேற்கின்றன.

**தனியார் நிறுவனங்களும் பங்கேற்பு**

அரசு நிறுவனங்கள் மட்டுமல்லாது, நுண்ணீர் பாசன நிறுவனங்கள், உர நிறுவனங்கள், பூச்சி மருந்து நிறுவனங்கள், வேளாண் இயந்திர நிறுவனங்கள், விதை நிறுவனங்கள், வங்கிகள், சர்க்கரை ஆலைகள் உள்ளிட்ட பல்வேறு தனியார் நிறுவனங்களும் கலந்து கொண்டு தங்களின் புதிய கண்டுபிடிப்புகளை காட்சிப்படுத்த உள்ளார்கள்.

**அரசின் அனைத்துத் திட்டங்களையும் ஒரே இடத்தில் தெரிந்து கொள்ள வாய்ப்பு**

கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம், நுண்ணீர்ப் பாசனத்திட்டம், இயற்கை வேளாண்மை, ஊட்டச்சத்து மிகுந்த சிறுதானிய இயக்கம், தென்னையில் பயிர்ப்பாதுகாப்பு, பாரம்பரிய நெல் இரகங்கள், ஒருங்கிணைந்த பண்ணையம், பசுமைக்குடில், செங்குத்து தோட்டம், நீரியல் தோட்டம், மாடித் தோட்டம், வேளாண் இயந்திரமயமாக்குதல், மதிப்புக்கூட்டுதல் போன்ற உழவர்களுக்காக அரசு செயல்படுத்தும் பல்வேறு திட்டங்களை தெரிந்து கொள்ளும் வகையில் சிறப்பு கண்காட்சிகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், உழவன் செயலி பதிவிறக்கம், திட்டப்பதிவு மையம், தமிழ் மண்வள இணைய தளம் மூலம் மண்வள அட்டை விநியோகம்போன்றஇணையவழிசேவைகளைப் பற்றி அறிந்து கொள்ளவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

**பழமரக்கன்று, காய்கறி விதை, நுண்ணூட்ட உரங்கள் விற்பனையும் உண்டு**

கண்காட்சியுடன், விவசாயிகள் வாங்கிச் சென்று தங்கள் பண்ணையில் சாகுபடி செய்வதற்கேற்றவாறு, புதிய இரகங்களின் காய்கறி விதைகள், மா, கொய்யா உள்ளிட்ட பழ வகைகளில் ஒட்டு இரகக் கன்றுகள், தென்னையில் வீரிய ஒட்டுக் கன்றுகள், நுண்ணூட்டக்கலவை உரங்கள், உயிர் உரங்கள், விதைகள் போன்ற இடுபொருட்களும் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களும் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

**பத்து தலைப்புகளில்**
**கருத்தரங்குகள்!**

அங்கக வேளாண்மை, விளை பொருள்களை ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்புகள், வேளாண் காடுகள் மூலம் வருமானம், நவீன வேளாண்மையில் புதிய உரங்களின் பயன்பாடு, வேளாண் இயந்திர மயமாக்கல் மற்றும் மதிப்புக்கூட்டல், தோட்டக்கலை சாகுபடியில் புதுமைகள், மின்னணு வேளாண்சந்தை மூலம் மின்னணு வர்த்தகத்தை அணுகுவதற்கான வாய்ப்புகள், வேளாண்மையில் புதிய தொழில் முனைவோர் மற்றும் புதிய கண்டுபிடிப்புகள், சிறுதானிய சாகுபடி, முருங்கை சாகுபடி மற்றும் ஏற்றுமதி போன்ற பத்து தலைப்புகளில் கருத்தரங்குகள் நடத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதில், தொழில்நுட்ப வல்லுநர்களும், அனுபவமிக்க வேளாண் பெருமக்களும், ஏற்றுமதியாளர்களும், உயர் அலுவலர்களும் கலந்து கொண்டு பல்வேறு பயனுள்ள தகவல்களை பகிர்ந்து கொள்ளவிருக்கிறார்கள்.

கொள்முதல் செய்பவர்விற்பனையாளர் சந்திப்பு (BuyersSellers Meet) வேளாண் பெருமக்கள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் உற்பத்தி செய்த விளை பொருட்களின் விற்பனையினை எளிதாக்கும் வகையில், கொள்முதல்செய்பவர் விற்பனையாளர் சந்திப்பும் (BuyersSellers Meet) நடைபெற உள்ளது.

**பாரம்பரிய விவசாயிகளுக்கு விருது!**

பாரம்பரிய நெல் சாகுபடியினை ஊக்குவிக்கும்வகையில் அரசு ஏற்கெனவே அறிவித்தபடி, அதிக விளைச்சல் பெற்ற மூன்று விவசாயிகளுக்கு விருதும், பணப்பரிசும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்க உள்ளார்கள்.

**தினமும் 15,000க்கும்**
**மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்பு!**

வேளாண் சங்கமத் திருவிழாவில் பெருவாரியான வேளாண் பெருமக்கள் கலந்து கொண்டு பயன்பெற வேண்டும் என்பதற்காக, மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலிருந்து விவசாயிகளை அழைத்து வருவதற்கு அரசு ஏற்பாடு செய்துள்ளது. தினமும் 15,000க்கும் மேற்பட்ட விவசாயிகள் வீதம் கலந்து கொள்வார்கள்.

இவ்விழாவில், அமைச்சர் பெருமக்களும், அரசு உயர் அலுவலர்களும் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றவுள்ளனர்.

தமிழ்நாட்டில் உள்ள வேளாண் பெருமக்கள் நவீன வேளாண் உத்திகளைநேரில்பார்த்து, தெரிந்துகொண்டு, அதனை அவர்களும் பின்பற்றி, மகசூல் அதிகரித்து, அதன் மூலம் வருமானம் உயர வேண்டும் என்ற நோக்கத்தில், தமிழ்நாடு அரசு திருச்சியில் பிரம்மாண்டமாக ஏற்பாடு செய்துள்ள வேளாண் சங்கமத் திருவிழாவில் பெருவாரியான விவசாயிகள் கலந்து கொண்டுபயன்பெறவேண்டும்என்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அறிவித்துள்ளார்.

### சாகர்மாலா திட்டத்தின் கீழ் தமிழ்நாடு உள்ளிட்ட பிற மாநிலங்களில்

# புதிய மீன்பிடித் துறைமுகங்களை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ?

## மாநிலங்களவையில் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. கேள்வி!

*நாமக்கல், ஜூலை 27-*

டெல்லியில் கோடைக் கால மாநிலங்களவை கூட்டத் தொடர் நடைபெற்று வருகிறது. அவையில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு சாகர்மாலா திட்டத்தின் கீழ் தமிழ்நாடு உள்ளிட்ட பிற மாநிலங்களில் புதிய மீன்பிடித் துறைமுகங்களை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா? அதற்கு மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை அமைச்சர் பர்ஷோத்தம் ரூபாலா பதிலளிப்பாரா என கேள்வி எழுப்பியுள்ளார்.

அவையில் மேலும் அவர் கேள்வி எழுப்புகையில், சாகர்மாலா திட்டத்தின் கீழ் தமிழ்நாடு உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் புதிய மீன்பிடித் துறைமுகங்களை உருவாக்க உத்தேசித்துள்ளதா ? அல்லது அரசாங்கம் ஏதேனும் நடவடிக்கை எடுத்ததா ? அப்படியானால், மாநில வாரியாக இந்தத்திட்டத்திற்காக அடையாளம் காணப்பட்ட இடங்களுடன் அதன் விவரங்களை அறிவிக்க வேண்டும்,

மேலும் இது சம்பந்தமாக அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்ட நிதி மற்றும் இது தொடர்பாக தமிழ்நாடு அரசு ஏதேனும் முன்மொழிவை சமர்ப்பித்துள்ளதா என்றும், அப்படியானால்,



முன்மொழி வின் விவரங்கள் மற்றும் இது தொடர்பாக ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் மற்றும் திட்டங்களை முடிப்பதற்காக காலக்கெடு நிர்ணயிக்கப் பட்டுள்ளதா என்பதை தெரிவிக்க வேண்டும் என்று கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி கேள்வி எழுப்பினார்.

அதற்கு பதிலளித்து பேசிய மீன்வளத்துறை, கால்நடை வளர்ப்பு மற்றும் பால் பண்ணை துறை அமைச்சர் பர்ஷோத்தம் ரூபாலா, மீன்வளத் துறை, மீன்வளம், கால்நடை வளர்ப்பு மற்றும் பால்வளத் துறை அமைச்சகம், பிரதான் மந்திரி மத்ஸ்ய சம்பதா யோஜனா (பிஎம்எம்எஸ்ஒய்) திட்டத்தின் படி தமிழ்நாடு உட்பட நாட்டில் 12 புதிய மீன்பிடித் துறைமுகங்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் அமைச்சகத்தின் சாகர்மாலா திட்டத்துடன் ஒன்றிணைவதற்கு இத்திட்டம் வழிவகுக்கிறது. சாகர்மாலா திட்டத்தின் கீழ் புதிய மீன்பிடி துறைமுகத்திற்கான எந்த முன்மொழிவையும் தமிழ்நாடு அரசு சமர்ப்பிக்கவில்லை.

PMMSY திட்டத்தின் கீழ் மீன்பிடித் துறை, மீன்பிடி, கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை அமைச்சகம் மூலம் துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் அமைச்சகத்தின் சாகர்மாலா திட்டத்துடன் ஒன்றிணைக்க ஒப்புதல் அளிக்கப் பட்டுள்ளது. அதன்படி, சென்னை, மும்பை, கொச்சின், விசாகப்பட்டினம் மற்றும் பாரதீப்பில் உள்ள 5 மீன்பிடி துறைமுகங்கள் நவீனமயமாக்கல் மற்றும் மேம்படுத்துதல் பணிகளும், PMMSY இன் கீழ் அங்கீகரிக்கப்பட்ட மீன்பிடித் துறைமுகத் திட்டங்களின் நவீன மயமாக்கல் மற்றும் மேம்படுத்தல் பற்றிய விவரங்கள் துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் அமைச்சகத்தின் சாகர்மாலா திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளது

கூடுதலாக, நீலப் புரட்சியின் திட்டங்களின் கீழ் ஒருங்கிணைந்த வளர்ச்சி, மேலாண்மை மற்றும் மீன்வளம், PMMSY மற்றும் மீன்வளம் மற்றும் மீன் வளர்ப்பு உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (FIDF), மீன்வளத் துறை, மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வள அமைச்சகம், நாட்டிலுள்ள 35 புதிய மீன்பிடித் துறைமுகங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. அங்கீகரிக்கப்பட்ட 35 புதிய மீன்பிடித் துறைமுகத் திட்டங்களின் விவரங்களும் வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் மஹாராஷ்டிரா, மும்பை, மல்லட் பண்டர் மீன்பிடித் துறைமுகத்தின் வளர்ச்சிக்கு ரூ. 96.60 கோடியும், ஒடிசாவின் பாரதீப் மீன்பிடித் துறைமுகத்தின் நவீனமயமாக்கல் மற்றும் மேம்படுத்தல் பணிக்கு ரூ. 108.91 கோடியும், தமிழ்நாடு, சென்னை மீன்பிடி துறைமுகத்தை நவீனமயமாக்குதல் மற்றும் மேம்படுத்துதல் பணிக்கு ரூ. 97.95 கோடியும், கேரளா மாநிலம் தோப்பும்பட்டியில் உள்ள கொச்சி மீன்பிடி துறைமுகத்தை நவீனமயமாக்குதல் மற்றும் மேம்படுத்துதல் பணிக்கு ரூ. 169.17 கோடியும், ஆந்திரா பிரதேசம் விசாகப்பட்டினம் மீன்பிடித் துறைமுகத்தை நவீனமயமாக்குதல் மற்றும் மேம்படுத்துதல் பணிக்கு ரூ. 151.81 கோடியும் என ரூ. 624.44 கோடியில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன என பதிலளித்தார்.

# ஒழுங்கு நடவடிக்கை ரத்து!

## தலைமைக் கழக அறிவிப்பு!

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், அகஸ்தீஸ்வரம் ஒன்றியத்தைச் சேர்ந்த அ.அருண்காந்த், தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து, மீண்டும் கழகப் பணியாற்ற அனுமதிக்குமாறு கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 25.7.2023

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

### அரசின் துரித நடவடிக்கையின் மூலம் விரைவில்

# திருப்பெரும்புதூர் இராமானுஜர் மணிமண்டபம் பயன்பாட்டுக்கு வரும்!

## ஆய்வுக்குப் பின், அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

*சென்னை, ஜூலை 27-*

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் நேற்று முன்தினம் (25.07.2023) திருப்பெரும்புதூர் ஆதிகேசவ பெருமாள் மற்றும் பாஷ்யகார சுவாமி (இராமானுஜர்) திருக்கோயில் மற்றும் இராமானுஜர் மணிமண்டபத்தினை ஆய்வு செய்து, மணிமண்டபத்தினை விரைவில் பக்தர்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார்கள்.

கடந்த ஆட்சிக் காலத்தில் எவ்வித திட்டமிடல் இல்லாமல், எடுத்தேன் கவிழ்த்தேன் என்ற அவசர கோலத்தில் பணிகள் எதுவும் முடிவுறாத நிலையில் முடிவுற்றதாக கணக்கு காட்டி 26.02.2021 அன்று நூற்றுக்கணக்கான பணிகளை திறந்து வைத்து விட்டு சென்றார்கள். அதில் இரண்டரை ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள இந்த இராமானுஜர் மணிமண்டபமும் ஒன்றாகும். இந்த மணிமண்டபத்தினை முழுமையான பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என்று அமைச்சர் அன்பரசன், சட்டப்பேரவை உறுப்பினர் செல்வப்பெருந்தகை ஆகியோர் முதலமைச்சர் அவர்களிடம் வைத்த கோரிக்கைக்கு ஏற்ப இன்றைக்கு இந்த இடத்தை முழுமையாக ஆய்வு செய்து இருக்கின்றோம். முதல் கட்டமாக அடர்ந்த தேவையற்ற செடி கொடிகளை அகற்றி, பாதைகளை மக்கள் நடமாடும் வகையில் சரி செய்யப்படும்.

இந்த இடத்தில் அர்ச்சகர் பயிற்சி பள்ளி தொடங்கிட ஏற்கனவே இரண்டு முறை விளம்பரம் தந்தோம். இது வரை யாரும் விண்ணப்பிக்க வில்லை. தொடர்ந்து அர்ச்சகர் பயிற்சி பள்ளியை அமைப்பதற்கு உண்டான முயற்சியை துறை மேற்கொள்ளும். இராமானுஜர் மணி மண்டபத்தில் அவரது வரலாற்றை சித்தரிக்கின்ற வகையில் புகைப்பட கண்காட்சியுடன், ஒலி ஒளி காட்சியோடு ஏற்பாடு செய்வதற்கு கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அது தொடர்பாக தனியார் ஆலோசகர் மூலம் வரைபடங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இன்னும் 15 நாட்களுக்குள் வரைபடங்கள் மற்றும் துறை அலுவலர்களுடன் இங்கு வருகை தந்து ஆய்வு செய்ய இருக்கின்றோம்.

திருக்கோயில்களுக்குச் சொந்தமான சொத்துக்களை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுப்பதில் இந்த அரசு முனைப்போடு செயல்பட்டு வருகிறது. இதுவரை ரூ.4,870 கோடி மதிப்பீட்டிலான 5,250 ஏக்கர் நிலங்கள் மீட்கப்பட்டுள்ளன. இப்பணிகளுக்காக ஏற்கனவே துறையின் தலைமையிடத்தில் இருந்த ஒரு மாவட்ட வருவாய் அலுவலர் நிலையிலான தனி அலுவலருடன் கூடுதலாக 3 மாவட்ட வருவாய் அலுவலர்களும், 38 மாவட்டங்களுக்கும் தலா ஒரு வட்டாட்சியர் வீதம் நியமனம் செய்யப்பட்டு ஆக்கிரமிப்புகளை கணக்கெடுத்து மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இவர்களுக்கான ஊதியமாக ரூ.10.5 கோடியினை துறை வழங்கி வருகிறது. அதே போன்று இராமானுஜர் திருக்கோயிலுக்கு சொந்தமான நிலங்களும் மீட்கப்படும். அவ்வாறு மீட்கப்படுவதை தொடர்ந்து செய்தியாக வெளியிடும் வகையில் எங்களுடைய பணி அமையும்.

திருக்கோயில் கோபுரங்களில் செடிகள் வளராமல் பாதுகாத்து தூய்மையாக வைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு, இதில் தனி கவனம் செலுத்திடவும் இணை ஆணையர்களுக்கு அறிவுரைகளும் வழங்கப்பட்டுள்ளன. கோபுரத்தில் செடிகள் வளர்ந்திருப்பதை அகற்ற நிதி ஒரு தடையே இல்லை. இப்பணிகளுக்கு கூடுதல் நிதி தேவையென்றாலும் ஆணையரின் பொது நலநிதியிலிருந்து வழங்கிட தயாராக உள்ளோம்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது திருப்பெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர் கு.செல்வப்பெருந்தகை, காஞ்சிபுரம் மாவட்ட வருவாய் அலுவலர் செ.வெங்கடேசன், இந்து சமய அறநிலையத்துறை மண்டல இணை ஆணையர் திருமதி இரா.வான்மதி, உதவி ஆணையர் லட்சுமிகாந்த் பாரதிதாசன், திருப்பெரும்புதூர் வருவாய் கோட்டாட்சியர் ஜா.சரவண கண்ணன், ஒன்றிய குழுக் தலைவர் எஸ்.வி.கருணாநிதி, பேரூராட்சித் தலைவர் திருமதி சாந்தி சதீஷ்குமார், ந.கோபால், திருக்கோயில் செயல் அலுவலர் கார்த்திகேயன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.